# இராஜராஜசோழன் முதல் குலோத்துங்கன் வரை

15

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

## வரலாற்றுத் தொடர்

கி.பி. 823-க்கும் 843-க்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்த பாண்டியப் படையெடுப்பில் சிங்கை நகரில் இருந்து அரசாண்ட ஜெயதுங்கபரராஜசிங்கன். கொல்லப்பட்டதும், அவனது சந்ததியினர் பாண்டிய அரசின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு ஆட்சி செய்தனர். அதே நேரத்தில் யாழ்பாடியான .பாணனும் அவனது பரம்பரையினரும் குடா நாட்டின் ஒரு சிறு பகுதியை ஆட்சி செய்ததாக நம்பப்படுகின்றது.

இதற்கிடையில் கி.பி.850-க்குப் பின் தமிழ்நாட்டில் சோழ அரசபலம் பெற்றபோது பாண்டியர்களுக்கும் அவர்களுக்குமிடையில் நடைபெற்ற மோதலில் அநுராதபுர அரசர்கள், பாண்டியர்களுக்கு உதவுவதற்காக தமது படைகளை அனுப்பி வந்தார்கள்.

கி.பி. 917 - 929 காலப்பகுதியில் ஐந்தாம் புலன் என்பவன் அனுராத புரத்தில் ஆட்சியிலிருந்தபோது தமிழ் நாட்டில் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்குமிடையில் நடந்த யுத்தத்தில் பாண்டிய மன்னனான மானவர்மன் இராஜசிங்கன் தோல்வியடைந்து அனுராதபுரத்திற்குத் தப்பி வந்து தனது முடியையும் சிம்மாசனத்தையும் அரச உடுப்பையும் அனுராதபுர அரசனிடம் . ஒப்படைத்ததாகச் சொல்லப்பபடுகின்றது.

பின் அநுராதபுரத்தையாண்ட மூன்றாம் உதயன் காலத்தில் (கி.பி. 941-949) சோழநாட்டையாண்ட பராந்தகன் அவற்றை தன்னிடம் ஒப்படைக்கும்படி உதயனைக் கேட்க அவன் அதற்கு மறுத்ததும், பராந்தன் இலங்கை மீது படையெடுத்து வந்ததாகச் சொல்லப்படுகின்றது.

சிங்கை நகர் ஊடாக நடந்த இந்தப் படையெடுப்பில் அனுராதபுர அரசன் மூன்றாம் உதயனுக்குச் சார்பாக பராந்தகனது சோழப்படைகளை எதிர்த்துப் போரிட்ட சிங்கை நகர மன்னன் கொல்லப்பட்டதாக முதலியார் இராஜநாயகம் குறிப்பிடுகிறார். அவனது பெயர் என்னவென்று தெரியவில்லை. சிங்கைநகர் வீழ்ந்ததும் பயங்கொண்ட அநுராதபுர அரசன் மூன்றாம் உதயன் பாண்டியனுடைய முடி உடை சிம்மாசனத்துடன் உருகுணைக்குத் தப்பிச் சென்று விட்டான். பரந்தாகனால் அனுராதபுரத்தைச் மட்டுமே கைப்பற்ற முடிந்தது. அதன் பின் அவன் அநுராதபுரத்தை அழித்துவிட்டு பெலநறுவையை தலைநகராக்கி சிறீஉத்தம சோழன் என்பவனை சிற்றரசனாக்கிவிட்டு தமிழ் நாட்டுக்குத் திரும்பியதாகச் சொல்லப்படுகிறது. கி.பி. 945 இல் நடந்த இந்த யுத்தத்திற்குப் பின் பராந்தகன் 'மதுரையு மீழமுங்' கொண்ட பட்டத்தைச் சூடிக் கொண்டதாக தமிழக வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து அறிய முடிகின்றது.

இக் கால கட்டத்தில் அநுராதபுரம் சிங்கை நகர் உட்பட்ட இலங்கையின் வடபகுதி (உத்தர தேசம்) சோழமண்டலத்தின் ஒரு பகுதியாகியது.

ஆயினும் கி.பி. 956 காலப்பகுதியில் இராட்டிர கூட (ஆந்திரா) அரசனான மூன்றாம் கிருட்டிணன் தக்கோலம் என்ற ஊரில் நடந்த போரில் பராந்தக சோழனை வென்றதும் இலங்கையிலும் சோழராட்சி தற்காலிக முடிவுக்கு வந்தது.

கி.பி 956 இல் சோழரின் பிரதிநிதியாகவிருந்த, பொலநறுவையிலிருந்து அரசாண்ட சிறீ உத்தம சோழனை தமிழ் நாட்டில் சோழருக்கு ஏற்பட்ட பின்னடைவைப் பயன்படுத்தி போர் தொடுத்து வெற்றி கொண்ட நான்காம் மகிந்தன் அநுராதபுர அரசின் வாரிசாக ஆட்சிக்கு வந்தான்.

ஆயினும் சோழர்களுடைய வலிமையையும் அவர்களது எதிர் காலப் படையெடுப்புக்களையும் கருத்தில் கொண்டு அவன் தங்களது முன்னோர்களின் இராஜதானியாகிய அநுராதபுரத்தை மீண்டும் தலைநகராக்க விரும்பவில்லை. பராந்தக சோழனால் உருவாக்கப்பட்ட பொலநறுவையையே அவனும் தனது தலைநகராக்கிக் கொண்டான்.

இக்கால கட்டத்தில் சிங்கை நகர் அரசுக்கு என்ன ஆயிற்று. யாழ்ப்பாடியான பாணனின் பரம்பரையினர் என்ன ஆனார்கள் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் எதுவும் தென்படவில்லை. ஆனால் மகாவம்சம் மற்றும், சூளவம்சம் என்பன குடா நாடு நான்காம் மகிந்தனின் ஆளுமைக்கு உட்பட்டதாக இருந்ததாகக் குறிப்பபிடுகின்றன. அதே நேரம் பராந்தகனை வெற்றி கொண்ட கிருட்டிணன் இராமேஸ்வரத்திற்கு வந்து தனது வெற்றிக் கொடியை நாட்டிய பின் நாகதீபத்திற்கு (நயினா தீவு) வந்ததாக சூள வம்சம் சொல்கின்றது.



முதலாவது சிவாலயம் – பொலநறுவை

தமிழகத்திலே முதலாம் இராஜ இராஜ சோழன் காலத்தில் மீண்டும் சோழப்பேரரசு தலையெடுத்தபோது கி.பி. 1001-க்கும் 1004-க்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கைக்கு படையெடுத்து வந்த இராஜ இராஜன், பொலநறுவை அரசன் நான்காம் மகிந்தனைக் கொன்று இலங்கையைக் கைப்பற்றி (வடபகுதி) அதை மும்முடிச் சோழமண்டபத்தில் ஒரு பகுதியாக்கிக் கொண்டதாக அறியப்படுகிறது.

முதலாம் இராஜ இராஜ சோழன் காலத்தில் சிங்கை நகரிலே மாநாபரணன் என்பவன் திறை செலுத்திக் கொண்டு ஆட்சி செய்து வந்தாகவும், பின்பு அவன் ராஜராஜனுக்கு எதிராக பாண்டியர்களுக்கு ஆதரவு தெரிவித்த காரணத்தால் தலை வெட்டப்பட்டாதாகவநம் "மானாபரணன் பொன்முடியானாப் பருமணிப் பசுந்தலை பொருகளத்தரிந்தான்" என்ற இராஜ இராஜனது மணி மங்கல சிலாசனத்தில் காணப்படும் குறிப்பிலிருந்து அறிய முடிகின்றது.

இராஜ இராஜனுக்குப் பின் அவன் மகன் இராஜேந்திரன் காலத்தில் அவன் இலங்கை முழுவதையும் கைப்பற்றியதோடு தங்களது முன்னோர்களால் கைப்பற்ற முடியாதிருந்த பாண்டியன் மானவர்மனது முடியுடை சிம்மாசனத்தையும் கைப்பற்றியதாகவும் சொல்லப்படுகின்றது.

கி.பி. 944 இலிருந்து கி.பி. 1070 வரை 126 ஆண்டுகள் சோழராட்சி இலங்கையில் நிலவியது. இக்கால கட்டம் முழுவதும் குடாநாடும், அனுராதபுர அரசும் (உத்தரதேசம்) மும்முடிச் சோழ மண்டலத்தின் ஒருபகுதியாகவே இருந்தன.


சிங்கை நகருக்கு அண்மையில் வங்கக் கடலோரத்தில் சோழர்களின் கப்பல்களும் மரக்கலங்களும் வந்து சேரும் இறங்கு துறைக்கு செம்பியன் பற்று எனும் பெயர் இடப்பட்டது. செம்பியன் பற்றிலிருந்து சோழர்களின் இலங்கைத் தலைநகரான ஜனநாத மங்கள (பொலநறுவைக்கு) பெருந்தெரு ஒன்றும் அமைக்கப்பட்டது. பிரசித்தி பெற்ற துறைமுகமான மாதோட்டத்திற்கு இராஜ இராஜபுரம் என்று பெயர் சூட்டப்பட்டது. அதற்கு சமீபமாக இருந்த பிரபல சிவனாலயமான திருக்கேதீஸ்வரத்துக்கு இராஜ இராஜேஸ்வரம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

சோழர்கள் பொலநறுவையில் மகாவலி கங்கைக் கரையில் ஜனநாத மங்களம் என்ற தங்களது புதிய தலைநகரை அமைத்தபோது அங்கு பல சிவாலயங்களையும் நிர்மாணித்தனர். இதில் இராஜராஜனின் மனைவியின் பெயரால் நிர்மாணிக்கப்பட்ட வானவன் மாதேவீஸ்வரம் என்னும் சிவாலயம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கி.பி. 1060-களில் தமிழ் நாட்டில் சோழ இளவரசர்களுக்கிடையில் வாரிசுரிமைப் போட்டி தொடங்கியதன் பின்பு சோழப்பேரசு வலிமை குன்றியது. 1070 இல் குலோத்துங்க சோழன் காலத்தில் உருகுணைப் பகுதியிலிருந்து படையெடுத்து வந்த விஜய பாகு பொலநறுவையைக் கைப்பற்றி இலங்கையில் சோழராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தான்:

இந்த விஜயபாகுவை சோழர்களை - குறிப்பாக தமிழர்களை - வென்ற மாவீரனாக சூளவம்சம் முதலான சிங்கள வரலாற்று நூல்கள் புகழந்துரைத்தாலும், அவன் குடாநாட்டு சிங்கை நகர் அரசுடன் தொடர்புடையவன் என்றும் இவனது தாயார் கி.பி. 1038 ஆம் ஆண்டு சோழர்களால் கொல்லப்பட்ட மானாபரணவின் பட்டத்து ராணியாகுமென்றும் முதலியார் இராஜநாயகம் குறிப்பிடுகிறார்.

சோழர்களை அக்கிரமக்காரர்கள் என்றும் பௌத்த விரோதிகள் என்றும் சோழப்படைவீரர்கள் பேய் பிசாசுகள் போல இரத்த வெறி கொண்டு எங்கும் திரிந்து பௌத்த பள்ளிகளையும் பௌத்த மடங்களையும் சூறையாடிப் பாழ் படுத்தினார்கள் என்றும் சூளவம்சம் குறிப்பிட்ட போதிலும், திருகோணமலையில் கிடைத்த கல்வெட்டு ஒன்று இராஜ இராஜ சோழன் இராஜராஜப் பெரும்பள்ளி என்ற புத்தவிகாரை ஒன்றை பொலநறுவையில் அமைத்து அதற்கு மானியமும் வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளது.



குமார பொற்குளம்


1. யாழப்பாணச் சரித்திரம் முதலியார் இராஜநாயகம்
2. யாழ்ப்பாண வைபவ மாலை முதலியார் குலசபாநாதன்
3. இலங்கை வாழ் தமிழர் வரலாறு பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை


- நக்கீரன்